முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, வேளச்சேரி மேற்கு பகுதி, 175 வது வட்ட தி.மு.க. சார்பில் மாணவர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் எம். குமார் ஏற்பாட்டில் மாபெரும் கிரிக்கெட் போட்டியில் மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் முதல் பரிசு வென்ற லட்சுமி நகரைச் சேர்ந்த Kolkata knight Riders அணிக்கு ரூ 1,50,000 பரிசுத் தொகையும், இரண்டாம் பரிசு வென்ற NSK நகரைச் சேர்ந்த Rajasthan Royals அணிக்கு ரூ 1,00,000 பரிசுத் தொகையும், சிறந்த வீரர்களுக்கு கோப்பைகளையும் வழங்கினார். இதில் பகுதி கழக பொறுப்பாளர், மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி வே.ஆனந்தம், வட்டக் கழக செயலாளர் கே.என்.தாமோதரன், டில்லிகுமார், என்.நேசன், சண்முகநாதன், ஜஸ்டின், ராகுல் குமார், சோம்ராஜ், கோபாலகிருஷ்ணன், தனசேகரன், சத்ய பிரபு, யோகா மணி, அமலதாஸ், சதீஷ்குமார், வெங்கடேஷ், தணிகைவேல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

வட்டக் கழகச் செயலாளர் இரா.நரேஷ்கண்ணா எம்.சி. தலைமை

பம்மல் வடக்கு பகுதி 2வது வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

முன்னாள் எம்.எல்.ஏ. இ.கருணாநிதி - பகுதி செயலாளர். த.ஜெயகுமார் சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜூன் 17 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி 2வது வட்ட செயல் வீரர்கள் கூட்டம், அனகாபுத்தூர் வி.ஆர்.பி. மஹாலில் 14.06.2026 அன்று ஞாயிற்றுக்கிழமை, மாலை 6.00 மணிக்கு வட்ட கழக செயலாளர் இரா.நரேஷ் கண்ணா தலைமையில் நடைபெற்றது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் - முன்னாள் எம்.எல்.ஏ. இ.கருணாநிதி , பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார், பம்மல் வடக்கு பகுதி துணைச் செயலாளர் க.ஜெயசீலன், தாம்பரம் மாநகரப் பிரதிநிதிகள் க.சுந்தரமூர்த்தி, இரா.குமரேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வட்டக் கழக அவை தலைவர் கே.மணி வட்டக் கழக துணை செயலாளர்கள் கே.நெடுஞ்செழியன், ஜெ.விமல், ந.செந்தமிழ்ச் செல்வி, வி.கே.ரமேஷ், ஒய்.நாதமுனி, எம்.ஆர். ராஜேந்திரன், ப.மணி மாறன், எம்.ஏ. இம்தியாஸ் அகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் க.பசுபதி, பம்மல் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஞா.பிரபு, தாம்பரம் மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் ஆ.செந்தில் குமார், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.சுரேஷ், எம். சரவணன், எஸ்.எச்.அருள் பிரான்சிஸ்,

ஆர்.யுவராஜ் மற்றும் கழக முன்னோடிகள் சி. நித்யானந்தம் டி.புனிதவேல், ஆர்.நடராஜன், பி.பட்டாபி, ஜெ.லட்சுமிபதி, அருமைராஜ், பிரேமச்சந்திரன், ம.சுகுமார், பி.ரவிச்சந்திரன், சந்திரசேகரன், வெங்கடேசன், தியாகராஜன், ராஜாராமன், ஆர்.கே.நரசிம்மன், கு.பாபு, ஆர்.பிரபாகரன், மணிபாரதி பிரசன்னராகவ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சருக்கான பயிற்சிக்கு விஜய் அணுக வேண்டிய முகவரி!

சட்டமன்ற
உறுப்பினர்களுக்கு
பயிற்சி
கொடுப்பது போல்

முதலமைச்சருக்கான
பயிற்சிக்கு
முத்துவேல் கருணாநிதி
ஸ்டாலினை
விஜய் அணுகலாம்.

தி.மு.க.வினரது வாக்குகளில்
வெற்றி பெற்ற கட்சிகளின் தயவோடு
ஆட்சி அமைத்திருக்கும் த.வெ.க.
கூச்சப்படாமல் - இதற்கு
அறிவாலயத்தை அணுகலாமே...

#என்னநாஞ்
#சொல்றது

மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

திருவள்ளூரில் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள்!

த.வெ.க. ஆட்சியில் அதிகரிக்கும் போதைப்பொருள் நடமாட்டம் குறித்து பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கடும் குற்றச்சாட்டு!

திருவள்ளூர், ஜூன் 17:-

திருவள்ளூர் மாவட்டம் புல்லரம்பாக்கம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் நடைபெற்ற வாகனச் சோதனையில் ரூ.1 லட்சம் மதிப்பிலான தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் மாவட்டம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

போலீசார் மேற்கொண்ட வாகனச் சோதனையின்போது, ஆந்திர மாநிலத்தில் இருந்து வந்த காரில் சுமார் 110 கிலோ எடையுள்ள ஹான்ஸ், கூல் லிப், விமல் உள்ளிட்ட தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், அவற்றை கடத்தி வந்த இருவரும் கைது செய்யப்பட்டனர். மேலும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரும் பறிமுதல் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் கஞ்சா, போதைப்பொருட்கள் மற்றும் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களின் கடத்தல், பதுக்கல் மற்றும் விற்பனை சம்பவங்கள் தொடர்ச்சியாக வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருப்பதாக பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

கடந்த சில நாட்களாகவே திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கஞ்சா பறிமுதல், போதைப்பொருள் விற்பனை, தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவது கவலையளிப்பதாகவும், இதனால் மாவட்டத்தில் சட்டம்-ஒழுங்கு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் எந்த அளவில் செயல்படுகின்றன என்ற கேள்வி எழுந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, ஆந்திர மாநில எல்லையை ஒட்டியுள்ள பகுதிகள் வழியாக தடை செய்யப்பட்ட பொருட்கள் தமிழ்நாட்டிற்குள் எளிதாக நுழைந்து பல்வேறு மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாக கூறப்படுவது, எல்லை கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளில் கூடுதல் கவனம் தேவைப்படுவதை வெளிப்படுத்துவதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பள்ளிகள், கல்லூரிகள், தொழிற் பேட்டைகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளை குறிவைத்து போதைப்பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக எழுந்துள்ள புகார்கள் பெற்றோர்களிடையே கடும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்கும் வகையில் விரிவான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். "போதைப்பொருட்களை முழுமையாக ஒழிப்போம், இளைஞர்களை பாதுகாப்போம்" என்ற வாக்குறுதிகளுடன் ஆட்சிக்கு வந்த த.வெ.க. அரசின் காலகட்டத்தில், தொடர்ந்து இதுபோன்ற பறிமுதல் சம்பவங்கள் நடைபெறுவது அரசின் நிர்வாக திறன் மற்றும் சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு குறித்து கடுமையான சந்தேகங்களை எழுப்புவதாக எதிர்க்கட்சிகள் விமர்சனம் முன்வைக்கின்றன.

போதைப்பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் தொடர்பாக பெரிய அளவிலான கடத்தல் வலையமைப்பு செயல்படுகிறதா, இதற்கு பின்னால் உள்ள முக்கிய நபர்கள் யார், மாநிலங்களுக்கு இடையேயான கும்பல்களுக்கு தொடர்பு உள்ளதா என்பதையும் முழுமையாக விசாரித்து, சம்பந்தப்பட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தொடர்ச்சியாக வெளிவரும் இது போன்ற சம்பவங்கள், தமிழகத்தில் போதைப்பொருள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களின் நடமாட்டத்தை முழுமையாக கட்டுப்படுத்துவதில் அரசு இன்னும் தீவிரமான, ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்துவதாக பொதுமக்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

மேயர் பிரியா – துணை மேயர் மு.மகேஷ் குமார் – தயாநிதிமாறன் எம்.பி. பங்கேற்பு!

மாமன்ற உறுப்பினர் பி.பாலாஜி (எ) ரஜினி பாலாஜியின் அலுவலகம்!

முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர் பாபு எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்!

சென்னை, ஜூன் 17-

பெருநகர சென்னை மாநகராட்சி நியமன மாமன்ற உறுப்பினர் பி.பாலாஜி (எ) ரஜினி பாலாஜியின் அலுவலகத் திறப்பு விழா இன்று (17.06.2026 புதன் கிழமை) காலை 10.00 மணியளவில் மாணிக்கச் செட்டி தெரு கார்ப்பரேஷன் பில்டிங், சூளை, சென்னை 112 எனும் முகவரியில் நடைபெறுகிறது.

மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தை சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் துறைமுகம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் பி.கே.சேகர் பாபு திறந்து வைக்கிறார்.

இவ்விழாவில் மேயர் பிரியாராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தயாநிதிமாறன் எம்.பி., கே.எஸ்.இரவிச்சந்திரன், ப.தாயகம்கவி, கார்த்திக்மோகன், தமிழன்பிரசன்னா, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, பி.எம்.யாழனி, கோ. ஏகப்பன், சொ.வேலு, வி.சுதாகர், புனிதவதி எத்திராசன், கே.எஸ்.எம்.நாதன், சரிதா மகேஷ்குமார், பி.கே.மூர்த்தி, பா. ஸ்ரீராமுலு, ஜி.சாந்தகுமாரி, கூ.பி. ஜெயின்,

எல்.சுந்தர்ராஜன், இராஜேஸ்வரி ஸ்ரீதர், சுதாதினதயாளன், எஸ். தமிழ்ச்செல்வி, ரமணிலோகேஷ், வெ.பரிமளம், ஜி.வி. நாகவள்ளி, என்.உஷாநாகராஜ், பி.ஜான்சிஉமா, ஜி. தாமோதரன், ந.பாலு, சு. மனோகர், ஆர்.புருஷோத்தமன், ஜெ.கிருஷ்ண மூர்த்தி, பி.எம்.மலையப்பன், புரசை எஸ்.குமார், வழக்கறிஞர் உ.விஜயபோஸ் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், மண்டல குழுத் தலைவர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

விழாவிற்கு வருகை தருவோரை கிஷோர் குமார், மணிகண்டன், சி. சதிஷ்குமார், சந்திரசேகர், எஸ்.ஹரிஹரன், ஆர்.தாமோதரன், வினோத்குமார், ஜெய்சூர்யா, எஸ்.தர்ஷினி, ஆகாஷ், லட்சுமணன், அவினாஷ், ஹித்திஷ் குமார்ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாதவரத்தில் சுதந்திரப் போராட்ட வீரர்

தியாகி விஸ்வநாததாஸ் 139 -வது பிறந்தநாள் விழா! புழல் எம். நாராயணன் பங்கேற்பு !

சென்னை,ஜூன்.17-

சுதந்திரப் போராட்ட வீரர், தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் 139 வது பிறந்தநாள் விழா மாதவரம் 17 வது வட்டம் கொசப்பூர் தியாகி விஸ்வநாததாஸ் நகரில் கொண்டாடப்பட்டது

சுதந்திரப் போராட்ட வீரர் தன் வாழ்நாளெல்லாம் சுதந்திரத்திற்காக அர்ப்பணித்து, பல்வேறு நாடகங்கள் மூலம் சுதந்திர உணர்வை மக்களின் தூண்டிய தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் 139 வது பிறந்த நாளை முன்னிட்டு அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் திருவுரு வப்படத்திற்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் பொதுமக்களுடன் சேர்ந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தி, தியாகியின் புகழ் ஓங்குக என கோசங்கள் எழுப்பி பிறந்த நாளை கொண்டாடி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்கள்.

தியாகி விஸ்வநாத தாஸ் நகர் தலைவர் கழக பகுதி பிரதிநிதி சி. மூர்த்தி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலை வகித்தார்.

இந்த நிகழ்ச்சியில் தியாகி விஸ்வநாத தாஸ் நகர் நிர்வாகிகள் ஈஸ்டர் ராஜ், ஜி. சுரேஷ், அண்ணாமலை, குமார், மகேந்திரன், கருணாநிதி, சுந்தரமூர்த்தி, மணி கண்டன், ஏகாம்பரம், பிரேம்குமார், கலைமணி, மகளிர் அணியைச் சேர்ந்த வளர்மதி, வனிதா, சுகந்தி ,தீபா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

தியாகி விஸ்வநாததாஸ் நகர் கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு தியாகியின் திருவுரு வப்படத்திற்கு தொடர்ந்து மழை தூவி அஞ்சலி செலுத்தினர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்குப் பகுதி 2வது வட்டக் கதுக செயல் வீரர்கள் கூட்டம் வட்டக் கழகச் செயலாளர் இரா.நரேஷ்கண்ணா தலைமையில் நடைபெற்றது. இதில் முன்னாள் எம்.எல்.ஏ. இ.கருணாநிதி ஆலோசனை வழங்கி பேசினார். பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார், க.ஜெயசீலன், க.சுந்தரமூர்த்தி, இரா.குமரேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றியம் தி.மு.க. சார்பாக மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் ஆலோசனைபடி முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு பெருங்காவூர் ஊராட்சி கூட்டு சாலையில் ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கருணாகரன் தலைமையில் கலைஞர் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து ஏழை எளிய மக்களுக்கு பிரியாணி வழங்கப்பட்டது. உடன் முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் எம். கோபி. கிளை கழக செயலாளர் ஏ.பிரபாகரன் அவைதலைவர் துரைகண்ணா ர.ரவிச்சந்திரன், டி.மாரி. இ.செல்வம், திலக்ஜி ஏ.அர்ஜினன். ஹேமாவதி. வேல்முருகன், ம.பாபு. ம.மாரிமுத்து, மேகநாதன். நாகு. முருகன். பழனி. க.மதன் பி.லோகேஷ், ந.வசந்த் எம். ஸ்ரீநாத் மாவட்ட நிர்வாகிகள் நா.பரசுராமன், வி.ஞானம். க.விரம்மாள், ம.ரத்தினமாலா. ஜெ. சிவகாமி, டி.மாரியம்மாள் ஏ.கே.செல்வகுமார் கே.வி.தியாகராஜன் சி.பழனி. எம்.ஜி.கார்த்திக் ராமு எஸ்கே.மணி. ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஜெகன் சி.சிவசங்கரன், முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் ந.முகமதுஅலி மாணவர்அணி கா.பிரபு,எம்.ரஃபிக் இந்நிகழ்ச்சியை ஊராட்சி கிளை கழக செயலாளர் ஏ.பிரபாகரன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

கண்ணீர் அஞ்சலி

சென்னை வடகிழக்கு மாவட்டம் இயக்கத்தின் மூத்த முன்னோடி
திருவொற்றியூர் மேற்கு பகுதி மாவட்ட பிரதிநிதி

திரு. முருகா எஸ்.ஆறுமுகம்
வயது - 71

அவர்கள் 16.06.2026 செவ்வாய்கிழமை (இன்று) அதிகாலை 02.00 மணியளவில் உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வருத்தங்களுடன் :-

மாதவரம் எஸ்.சுதர்சனம் MA.BL.,
சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர்

சென்னை வடகிழக்கு மாவட்டம்